**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 30.01.2026**

**C.C. 226/2024**

**அ.சா. 3 மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 17.03.2016ம் தேதி என்னை விசாரித்தார்கள். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களை போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய விபரமான "2016ம் வருடம் ஒரு நாள் மதியம் 1மணிக்கு மேல் சங்கரன்கோவில் நகராட்சி புது கட்டிடத்திற்கு மேற்குபுறத்தில் நான் வேலை செய்துகொண்டிருந்தேன்" என்பதை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் முதல்விசாரணையில் கூறிய விபரமான "சம்பவம் நடந்த அன்று சுமார் 16 நபர்கள் அங்கு வேலை செய்தோம்" என்பதை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சம்பவம் நடந்த அன்று என்னுடன் யார் வேலை செய்தார்கள் என்றால் ஆறுமுகம், முனியப்பன், சின்னப்பாண்டி, பாலாஜி மற்றும் வேறு சில நபர்கள் என்னுடன் வேலைசெய்தார்கள். மேற்படி நபர்களின் பெயர்களை போலீசார் விசாரணையில் நான் கூறினேனா என்றால் கூறினேன். இறந்துபோன காளியப்பனுக்கு நான் எவ்வகையில் உறவினர் என்றால் நான் அவரது தம்பி மகன். சங்கரன்கோவில்– திருவேங்கடம் செல்லும் சாலை வாகனங்கள் பொதுவாக அதிகமாக செல்லும் சாலை என்றால் சரிதான். நான் வேலை செய்துகொண்டிருந்ததால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் எந்தந்த வாகனங்கள் அந்த சாலையில் சென்றுகொண்டிருந்தன என்று என்னால் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல. பின்பு சாட்சி தாமாக முன்வந்து சரிதான் என்று கூறினார். நான் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் இடையில் சுமார் 50 மீ–100 மீ துூரம் இருக்கும் என்றால் 50மீ துூரம் இருக்கும். 50 மீ துூரத்தின் காரணமாக நான் வேலை செய்துகொண்டிருந்த இடத்திலிருந்து விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எந்தந்த வாகனங்கள் சென்றுகொண்டிருந்தன என்று நான் பார்த்திருக்க முடியாது என்றால் சரிதான். கோட்டைத்துரையை எனக்கு எந்த அடிப்படையில் தெரியும் என்றால் அவர் என்னுடன்

ஒரே பள்ளியில் படித்தவர். நான் எந்த பள்ளியில் படித்தேன் என்றால் நான் செங்குந்தர் நடுநிலைப்பள்ளியில் படித்தேன். கோட்டைத்துரை இந்து தொடக்கப்பள்ளியில் 5ம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளார் என்றாலும், அவர் 5ம் வகுப்பிற்கு மேல் படிக்கவில்லை என்றாலும், அவர் என்னுடன் ஒரே பள்ளியில் படித்தார் என்று பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்துபோன நபர் எனது பெரியப்பா என்பதால் அவரது இறப்பிற்கு நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெரியப்பாவை வேறொரு வாகனம் மோதியது என்றாலும், எதிரி ஓட்டிய வாகனம் எனது பெரியப்பாவை மோதியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**